**சுருக்கம்**

கூட்டுறவு – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சட்டமன்ற பேரவை விதி எண். 110ன் கீழான அறிவிப்பு – 31.01.2021 அன்று நிலுவையிலுள்ள கூட்டுறவு வங்கிகளில் பயிர்க் கடன் பெற்ற 16,43,347 விவசாயிகளின் கடன் நிலுவைத் தொகை ரூ.12110.74 கோடி தள்ளுபடி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (சிசி1)த் துறை**

அரசாணை (நிலை) எண். 15 நாள்: 08.02.2021
சார்வரி வருடம், தை 26,
திருவள்ளுவர் ஆண்டு 2052.

படிக்க:

1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி எண்.110ன் கீழ் ஆற்றிய உரை, நாள் 05.02.2021. (து.நா.ச.பே.எண்.01).
2. கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரின் (மு.கூ.பொ) கடிதம் எண்.ந.க.6666/ 2021 வேகதி2, நாள் 05.02.2021.

------

**ஆணை:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 05.02.2021 அன்று சட்டமன்றப் பேரவையில், சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ், கூட்டுறவு வங்கிகளில் பயிர்க்கடன் பெற்ற 16.43 இலட்சம் விவசாயிகளின் கடன் நிலுவைத் தொகையான 12,110 கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்படும் என அறிவித்தார்கள்.

2. மேற்காணும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்த, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் தமது 05.02.2021 நாளிட்ட கருத்துருவில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை நிறைவேற்றும் பொருட்டு 31.01.2021 அன்று நிலுவையில் உள்ள 16,43,347 விவசாயிகளின் ரூ.12,110.74 கோடி பயிர்க்கடன்களை தள்ளுபடி செய்து ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 05.02.2021 அன்று சட்டமன்றப் பேரவையில், சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ் அறிவித்தவாறு 31.01.2021 அன்று கூட்டுறவு வங்கிகளில் நிலுவையில் உள்ள 16,43,347 விவசாயிகளின் பயிர்க்கடன் ரூபாய் 12,110.74 கோடியை தள்ளுபடி செய்து அரசு ஆணையிடுகிறது.

4. இத்திட்டத்தினை செயல்படுத்த தேவையான நிதி அரசால் கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கப்படும். இத்திட்ட செயலாக்கம் தொடர்பான விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் தனியே வெளியிடப்படும்.

5. இந்த அரசாணை நிதித்துறையின் ஒத்திசைவுடன், அத்துறையின் அ.சா.கு.எண். 673/இ.செ (கூ.உ.ம.நு.பா)/2021, நாள் 08.02.2021 –ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தயானந்த் கட்டாரியா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை– 600 010.
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி,
சென்னை– 600 001.
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி,
சென்னை– 600 004.
மாநில கணக்காயர், சென்னை –600 018. (2 நகல்கள்)
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை –600 035. (2 நகல்கள்)

நகல்:–
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை –600 009.
மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை –600 009.
கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை முதன்மை தனிச்செயலாளர், நிதித்துறை, சென்னை– 600 009.
கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் முதன்மை தனிச்செயலாளர்,
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சென்னை –600 009.
நிதி (கூ,உ(ம)நு.பா)த் துறை, சென்னை– 600 009.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

இரா. செல்லாவேல்
8/02/2021

பிரிவு அலுவலர்

8.2.21